தாயகம் - இலவசவெளியீடு
ஐப்பசி Oct .2005
Free Circulation

ஐப்பசி Oct. 2005

# வெற்றிமணி

Vettimaniy

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
இணை ஆசிரியர்: திருமதி வலன்ரீனா இளங்கோவன் B.A (hons)
மணி-55 ஓசை 3

**Orientalische Textilien & Schmuck**

யேர்மனியில் நகைகளுக்கும் பட்டுப் புடவைகளுக்கும், ஒப்பற்ற ஸ்தாபனம்

Königswall 16 (Am HBF)
44137 Dortmund/Germany
Tel: 0231/162377 Fax: 49.0231/147836



## 25 வது நினைவு ஆண்டு



விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்





சிறுவர் அரங்கில்...

கலையரங்கில்...





விளையாட்டரங்கில்...

உள்ளே... GIT பற்றிய ஓர் கண்ணோட்டம்

**NEEBAH JEWELLERY**
அழகிய கலைநயம் எழிலுற தொழில்வளம் தரம்மிகு தங்க வைர நகைகளுக்கொரு இடம்
No. 77, Manning Place,
Wellawatte, Colombo - 06.
Tel: 2505942 Mobile: 0777-597120

**IMPORTAS GmbH**
சுவிஸ் நாட்டில் நீண்டகால அனுபவமும், மக்களின் நம்பிக்கையினைப் பெற்ற IMPORTAS GmpH நிறுவனத்தின் யேர்மனி கிளை
Roettgen 143 EKZ / 42103 Wuppertal
Germany
Tel: 0202 265 53 84
Fax: 0202 265 53 85
Cell: 0176 2321 70 84

**Kaneen Electronics**
மாணவர்கள் கல்வியில் மேன்மையுற
தமிழர் வாழ்வு வளம்பெற
என்றும் நம் நல் வாழ்த்துக்கள்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Germany
Tel: 0205 3423 740
0172/29 31 2 66 Fax: 0205 3423 741



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
கவிஞர் வி.க

Vettimaniy



ஸ்தாபகர்
அமரர் மு.க. சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர், குரும்பசிட்டி
பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

கௌரவ ஆலோசகர்
கலாநிதி
மனோன்மணி சண்முகதாஸ்

பிரதம ஆசிரியர்
''ஓவியக்கலைவேள்''
கலாநிதி
மு.க.சு. சிவகுமாரன், B.F.A

*Publisor & Chief Editor*
*Dr. M. K. S. Sivakumaran, B.F.A*

இணை ஆசிரியர்
திருமதி
வலன்ரீனா இளங்கோவன், B.A

*Associate Editor*
*Mrs. Valanteena Elangkovan, B.A. (Hons)*

தாயகத்தில் தொடர்புகளுக்கு:
வெற்றிமணி
தபால் பெட்டி ஒழுங்கை
பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்.
*T.P: 0777115569*

*Published By*
*Dr. M.K.S. Sivakumaran B.F.A*
*Post Box 2765*
*58477 Ludenscheid*
*Germany*
*Tel & Fax.*
*02351/45 88 62*
*0176 240 68 74 9*
*e-mail: vettimaniy@hotmail.com*

QB 830

சர்வதேச மக்கள் தொடர்பு:
திரு. க. இளங்கோவன்
(Dip.in.S.Sc, Dip.in. F.Sc)
(தாயகம்)
திரு. கதிர் துரைசிங்கம் (கனடா)
சமூகஜோதி த. புவனேந்திரன்
(ஜேர்மனி)
திரு. சஞ்சீவன் சிவகுமாரன்
(இங்கிலாந்து)

*General Manager*
*Dr. Vani-Sivarajan*
*65/295 Crow Island*
*Colombo-15, Sri Lanka*

வெற்றிமணிமொழி
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது
-அரவிந்தர்-

# மாணவர் அறிவு வளர்ச்சிக்காக ''வெற்றிமணி'' பத்திரிகை நடாத்திய தமிழ்த் தொண்டர் சுப்பிரமணியம்

வலிகாமம் வடக்கிலுள்ள குரும்பசிட்டிக் கிராமம் சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன் கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு, விவசாயம், வர்த்தகம் முதலிய துறைகளில், யாழ். குடாநாட்டிலே கொடிகட்டிப் பறந்த கிராமம். பொன். பரமானந்தர், 'ஈழகேசரி' பொன்னையா, ரசிகமணி கனக செந்திநாதன், பண்டிதர் வ.நடராஜன், ஓவியர் கே.கே.வி.செல்லையா, கலாகேசரி ஓ.தம்பித்துரை, கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, கலைஞானி தியாகன், 'வெற்றிமணி' மு.க.சுப்பிரமணியம், கவிநாயகர் வீ.கந்தவனம் முதலியோர் கல்வி, கலை இலக்கியம், நாடகம், சிற்பம், சித்திரம், பத்திரிகைத்துறை ஆகியவற்றினூடாக அக்கிராமத்துக்குப் பெருமை சேர்த்தனர்.

உழைப்பில் ஊக்கங் கொண்ட மக்களால் கமத்தொழில் செழித்து விளங்கியது. முயற்சி மிக்க வர்த்தகர்களால் பணம் கொழித்தது. ஆனால் இன்று அக்கிராமம்....?

கால் நூற்றாண்டு கால யுத்தத்தால், சிதறிச் சின்னாபின்னமாகி.... 'இலக்கியம் எழுதிய வீதியும் தண்ணொளி வீசிய முற்றமும்' போர்ச் சூழலுக்கு இலக்காகி, 'பேருந்து சென்ற பெருவீதி, பள்ளியில் எழுத்தறிவித்த கரும்பலகை எறும்பூர இடமின்றிச் சுருங்கி நொருங்கி விடு தலை வேள்வித் தீயில் கரும்புலியாகி' கருகி காட்சி தருகிறது!

அக்கிராமத்தின் அன்றைய செழிப்பும் சிறப்பும் அழிந்து இன்று பழங்கதையாகிவிட்ட போதிலும் நெஞ்சத்து நினைவுகளையும் அங்கு வாழ்நத பெருமக்களின் பணிகளையும் எளிதில் மறந்துவிட முடியாது. அக்கிராம வளர்ச்சி வரலாற்றில் ஆழமாகத்தடம் பதித்துள்ள பெரியார்களில் ஒருவராக நினைவு கூறப்படும் அமரர் மு.க.சுப்பிரமணியம், சாதாரண விவசாயக் குடும்பத்தில் தோன்றி, விடாமுயற்சியால் கல்வியில் முன்னேறி குரும்பசிட்டி பொன். பரமனாந்தர் வித்தியாலய அதிபராக (1968 - 1977) பத்து வருடங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி அக்கல்விக்கூடத்தை கல்வியிலும் கட்டிடத்திலும் மிக உன்னத நிலைக்கு உயர்த்தினார். கல்விப் பணிக்கு மேலதிகமாக ஆசிரியர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான தொழிற்சங்கம், கலை இலக்கிய ஊக்குவிப்பு, சமூகப் பணிகள் என இவரின் சேவைகள் விரிவுற்ற போதிலும் கல்விச் சேவையிலிருந்த காலத்திலும் அதனின்று ஓய்வுபெற்ற பின்னரும் மாணவர்களின் அறிவை விருத்தி செய்வதையே பிரதான குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அதற்காக 1950 இல் 'வெற்றிமணி' என்னும் பெயர்கொண்ட மாணவர்க்கான மாதப் பத்திரிகையை ஆரம்பித்து சுமார் 25 ஆண்டுகளாக நடத்தியவர். அதன்மூலமாக மாணவர் மத்தியில் அறிவையும் வாசிப்புப் பழக்கத்தையும் வளர்த்தார்.

'வெற்றிமணி', ''ஒருபொழுது போக்குக்காக வாசித்துவிட்டு வீசிவிடக் கூடிய பத்திரிகையல்ல. சிறுவர்களும் பெரியவர்களும் வைத்துப் படிக்கக் கூடிய விடயங்கள் அடங்கிய பத்திரிகையாகும்..... எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியிலும் வெற்றிமணியைத் தொடர்ந்து ஒலிக்கச் செய்து வருகின்றோம். அது பயனுள்ள ஒரு 'பணியாக இருப்பதனால்'' என அப்பத்திரிகையின் பத்தாவது ஆண்டின் இதழில் அமரர் மு.க.சு.தமது எண்ணத்தை வெளியிட்டிருப்பதிலிருந்து அதன் தரம் பேணப்படுவதிலும் அதற்காக இலாப நோக்கின்றி, தன்சொந்தப் பணத்தைச் செலவிட்டிருப்பதையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஒரு நல்ல பணிக்காக எவ்வளவு இன்னல்கள், இழப்புகளையும் தாங்கிக்கொள்ளும் இதயம் கொண்ட பெரியாராக அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் விளங்கினார்.

21.09.1980 இல் அமரத்துவம் எய்தும் வரை இப்பத்திரிகையை சிறப்பாகவும் ஒழுங்கு தவறாமலும் தனியொருவர் தனது ஓய்வூதியப் பணத்தைக் கொண்டு நடத்தியமை ஒரு சாதனையே!

நல்ல நோக்கத்துடன் ஒருவர் வித்திட்டுப் புரிந்துவந்த நற்பணி அவரின் மறைவுடன் - சிலகாலம் தடைப்பட்டிருந்தாலும் பின்னர் புதுப்பொலிவுடன் துளிர்த்து வளர்ந்து பயன்தரும் என்பது 'வெற்றிமணி'யைப் பொறுத்தவரை நிஜமாகியுள்ளது! தந்தையார் மு.க.சுப்பிரமணியம் தொட்ட பணியை அவரின் மைந்தன் ''ஓவியக் கலைவேள்'' கலாநிதி மு.க.சு.சிவகுமாரன், மீண்டும் 'வெற்றி மணி'யை 1994இல் ஜேர்மனியில் மறுமலர்ச்சி பெறச் செய்து, வண்ணமலராக புதுப்பொலிவுடன் ஜேர்மனி, கனடா, லண்டன் முதலிய நாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் கடந்த 11 வருடங்களாக உலவவிட்டு வருவதைப் பாராட்ட வேண்டும். 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்' என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்கிறார் கலாநிதி சிவகுமாரன்! ''தாய் மண்ணில் பிறந்தவன், அன்று அவள் நிழலில் வளர்ந்தவன், சேயாய்த் தமிழ்ப் பால் குடித்தவன் - அதனால், என்றும் வெற்றிமணி தமிழுக்கு!'' என்ற வீறார்ந்த உணர்வுடன் இன்று 'வெற்றிமணி'யை தமது தந்தையார் பெரியார் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் அடிச்சுவட்டில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் மைந்தனுக்குப் பாராட்டுகள்! மாணவர்களின் அறிவுக்கும் ஆக்கங்களுக்கும் முன்னுரிமை அளித்து இவ்வாண்டிலிருந்து 'வெற்றிமணி' தாயகத்திலும் வெளிவரத் தொடங்கியுள்ளது.

'வெற்றிமணி' ஸ்தாபகரும் தமிழ்த் தொண்டருமாகிய அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் இருபத்தைந்தாவது சிரார்த்ததினம் அவரின் உறவினர்களாலும் மாணவர்களாலும் எதிர்வரும் 27.092005 நன்றியுணர்வுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

'வெற்றிமணி'யின் அண்மைய வெளியீடான, கனடியத் தமிழ் எழுத்தாளரும் கலையார்வலருமான கதிர்துரைசிங்கம் எழுதிய ''காதோடு காதாக'' என்னும் நூலின் வெளியீட்டு விழா கனடா ஸ்காபரோ நகர மையத்தின் கேட்போர் கூடத்தில் 02.10.2005 அன்று மாலை நடைபெறும்போது, அமரர் மு.க.சுப்பிரமணியம் நினைவாக, கனடா அஞ்சல் திணைக்கள அனுசரணையுடன் தபால் தலையும் வெளியிடப்படவுள்ளது. ஜேர்மனி 03.102005 அன்று அமரர் மு.க.சுப்பிரமணியம் அரங்கில், பண்ணிசைக்கலை மாமணி பொன். சுதந்தரலிங்கத்தின் 'நாத சங்கமம்' சீ.டி.வெளியீட்டு விழாவும் ஏற்பாடாகியுள்ளது. இந்த இறுவட்டுகளில், ஈழத்து தலங்கள் மீது முத்துச்சிரிப்பு, யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை, தமிழிசை அமுதம் முதலிய பாடல்கள் அடங்கியுள்ளன.

நன்றி - தினக்குரல் 25.09.2005

## தாய் முற்றத்தில் வெற்றிமணி

''கவிவாணன்''
– இரா. சம்மந்தன் –

கொட்டு முரசாய்
வெற்றிமணியின் ஓசையது
எட்டுத்திக்கும் ஒலிப்பதுவாய்
யேர்மன் கனடாவோடு
இன்று தாய் மண்ணிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L மாணவர்களுக்கான GIT பற்றிய ஓர் கண்ணோட்டம்





இன்று தகவல் தொழில்நுட்பமானது உலகில் உள்ள அனைவருக்கும் அவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. எனவே இதனை விரும்பியோ, விரும்பாமலோ கற்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், வயது, பால் வேறுபாடின்றி அனைவரும் தகவல் தொழில் நுட்பத்தில் நாட்டம் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

அந்த வகையில் இன்று ஒரு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு பரீட்சைப் பெறுபேறுகளை மட்டும் கருத்தில் கொள்ளாது ஆங்கில அறிவு, தகவல் தொழில்நுட்ப அறிவு என்பனவும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. இதனால் தான் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு ஏனைய பாடங்களுடன் கணனி, ஆங்கிலம் போன்ற பாடங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளனர். எனவே மாணவர்கள் ஏனைய பாடத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது இவற்றிலும் ஆர்வம் காட்டுவதன் மூலம் எதிர் காலத்தில் ஓர் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு இவை பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

க.பொ.த (உ/த) மாணவர்களுக்கு அரசாங்கம் 2002 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் பொது தகவல் தொழில்நுட்பம் (General Information Technology) என்னும் பாடத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது க.பொ.த (உ/த) 12ம் தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமே அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கற்கை நெறியானது ஒரு வருடத்தை கொண்டதாகவும் 12ம் தரத்தில் எந்தப் பாடநெறிகளை பின்பற்றும் அனைத்து மாணவர்களுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 60% ஆனது போதனை முறையாகவும் 40%ஆனது செய்முறையாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிக்காக வாரத்தில் இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் இவர்களுக்கான இக்கற்கைநெறி ஆங்கில மொழி மூலமே கற்பிக்கப்பட வேண்டும் என்பது அரசின் கட்டாய நிபந்தனையாகும். தேவை ஏற்படின் விளங்கப்படுத்துவதற்கு மட்டுமே தமிழ் மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கான கற்கை நெறியில் ஆறு பாட அலகுகள் உள்ளன. அவைகள் பின்வருமாறு

| அலகு (Unit) | காலம் (Periods) |
|---|---|
| 1. IT Fundamentals | 12 (Theory 11, Practical 01) |
| 2. Mathematics for Computing | 10 (Theory 10, Practical 0) |
| 3. Information for Computing | 14 (Theory 14, Practical 0) |
| 4. Computer Programming | 20 (Theory 10, Practical 10) |
| 5. Use of Computer Software | 14 (Theory 14, Practical 0) |
| 6. IT and National Development | 02 (Theory 02, Practical 0) |

Total 72 (Theory 51, Practical 21)
(40 Minutes for One Period)

2006ம் ஆண்டில் உயர்தர மாணவர்கள் அனைவருக்கும் முதல் தடவையாக அரசாங்கம் பரீட்சை ஒன்றினை இவ்வருடம் August மாதம் நடாத்தவுள்ளது. இதன் பெறுபேறு பல்கலைக்கழக அனுமதியின் போது கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. எனினும் பெறுபேற்றுச் சான்றிதழில் இப்புள்ளியும் குறிப்பிடப்படும். இதனால் தொழில் வாய்ப்பொன்றை பெறும் போது இவ் அரச பெறுபேறு முக்கியம் பெறும். இப்பரீட்சை வினாத்தாள் ஆனது ஆங்கில மொழி மூலம் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டது. இதில் பகுதி I 40 MCQ வினாக்களைக் கொண்டது. பகுதி II ஆறு வினாக்கள் கொடுக்கப்பட்டு அதில் ஏதாவது நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். எனவே ஆங்கில மொழி மூலமாக அரசாங்கத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்கு மாணவர்கள் முக்கியத்துவம் கொடுத்து படிப்பார்கள் ஆனால் அவர்கள் தகவல் தொழில் நுட்பத்தில் சிறந்தவர்களாக திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

*K.R. சுகுமார்*
**C.B. கணனிக்கல்வி நிறுவனம். கோண்டாவில்.**

## புதிய அமுதசுரபி ஜேர்மனியிலிருந்து மாணவர்கள் மீது பொழியும் அமுதமழை

## குறுக்கெழுத்து போட்டி– 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | X | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | X |
| 19 | X | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | X | 28 | X | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1. நாட்டைக் கட்டியெழுப்ப இதனை செய்தல் வேண்டும்
7. ஆண்டை இப்படியும் அழைப்பது வழக்கம். இறுதி எழுத்து இல்லாமல், குளம்பியுள்ளது.
11. பெண்கள் தாயாகும் போது இப்படிக் காணப்படுவர்.
13. மழை வருவதற்கு அறிகுறியாக இதைக் கூறுவதுண்டு. (குளம்பியுள்ளது)
16. இதனை இழந்தவர்கள் எமது நாட்டில் அநேகர் உள்ளனர். இங்கே இறுதி எழுத்து இல்லாமல் போய்விட்டது.
21. திருடிய பொருட்களை இப்படியும் வைத்திருப்பர் சிலர் (மாறிவந்துள்ளது.)
25. அக்கினியிட்டு அந்தணர்களால் செய்யப் படும் கிரியை. (இங்கே இறுதி எழுத்து மறைந்து நிற்கிறது.)
31. அசுரர்களை இசிசொற்களாலும் அழைப் பதுண்டு.

**மேலிருந்து கீழ்**

1. சிலர் தேவையில்லாக் காரியத்தில் ஈடுபட்டு இதனை அடைவதுண்டு
2. மரக்கால், பெட்டி இவற்றை இப்படியும் அழைப்பதுண்டு
3. தமிழரின் பண்பாட்டில் இது சிறந்து விளங்கின்றது.
5. வண்டில் மாட்டை சிங்கள மொழியில் இப்படி அழைப்பர். குளம்பியுள்ளது.
6. திருமணமான ஆண்களின் முதல் எழுத்திற்கு முன்னே இதனையும் சேர்ப்பர்.
16. பூமி, தாய், என்பவற்றை இப்படியும் கூறுவர்
24. முதல் முறை அறுவடை தொடங்கும் போது இதனை எடுப்பர்.
26. கொலை செய்வதற்கு இதனைப் பயன் படுத்துவர். (இங்கே இறுதி எழுத்து இல்லாமல் போய்விட்டது.)
28. விளக்கை எரிப்பதற்கு இதனை பயன்படுத்துவர்.

தொகுப்பு:- எஸ். சறா




**அனுப்பவேண்டிய முகவரி**
*திருமதி. வலன்ரீனா இளங்கோவன்,*
இணை ஆசிரியர், வெற்றிமணி,
தபால்பெட்டி ஒழுங்கை,
பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய், யாழ்ப்பாணம்

**குறுக்கெழுத்துப்போட்டி இல.1 பரிசு பெறுபவர்கள்**

முதலாம் பரிசு - 3,000 ரூபா செல்வி. ச. சிறோமி 11A
யா/நாவற்குழி மகா வித்தியாலயம், நாவற்குழி

இரண்டாம் பரிசு - 2,000 ரூபா செல்வன் து. ரட்சகன் 11ம்ஆண்டு
யாழ்/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 1,000 ரூபா செல்வன் கிரிசாந்தன் 13
யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்

குறிப்பு மாதிரிப்படிவம் தயாரித்து பெயர், வகுப்பு, பாடசாலை, விலாசம் எழுதி தபால் உறையில் இடப்பக்க மேல் மூலையில் வெற்றிமணி, குறுக்கெழுத்துப்போட்டி என எழுதி அனுப்பவும்.

*தாயகத்தின் உணவுகளை குணம், மணம் குன்றாமல் ஜேர்மனியில் பரிமாறுபவர்கள்*





**புதிய அமுதசுரபி**



**Rheinische Str.55**
**44137 Dortmund Germany**
**Tel & Fax: 0231-120 66 92**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐங்கரன் ஆதரவில்

# மாணவர் அரங்கம்

Miss. Sayisaranya Raveenthran
A/L 2007
J/ Vembadi Girls' High School



### Good Living Conditions

It is the right of man to have a good living condition. Good living condition means having all the means to fulfill all their needs and to lead a happy fruitful life. They should have good standard of living. Good Standard of living consist of three things.

They are,

i) Home and environment
ii) Food and nutrition
iii) Leisure time activities

We should live in a very convenient environment where people should not be allowed to destroy natural beauty. They should live in such away so that their environment may not be polluted.

Those who are neighbours should have good understanding of one another, respect the lives of others and let others live freely. Man should have an environment where no one harms the other. As well as he should live in a house where he feels comfortable. That should be large enough and airy with all the necessary facilities.

As for as food is concerned he should take nutritious food, what we eat decides how we grow. If we eat nutritious food we will be healthy and strong. The food we consume must contain minerals and vitamins. Every one should spend his leisue time usefully. So as to improve or develop his knowledge. By reading Books and Magazins in home or in Library.

These are some of my advices for a good living conditions.

யோ. அஷா. தரம் 10
யா/வைத்தீஸ்வரா கல்லூரி



### சுறுசுறுப்பு

உன் வாழ்க்கையில்
ஆயிரம்
இருக்கலாம் "வெறுப்பு"
அவை அனைத்திற்கும்
போட்டு விடு "தடுப்பு"
முத்துக்கள் போன்ற உன் "சிரிப்பு"
முகவரியாய் அமைந்தது தான் "இதயத்துடிப்பு"
உயர்வுக்கு வழியை உன் இதய
துடிப்பில் போட்டு வைத்தால்
உழைப்புக்கு வேண்டும் என்ற
உனக்கு வந்து விடும்
"சுறுசுறுப்பு"

### முதியோரைப் பேணுவோம்

"வாழுகின்ற மனிதருக்கு வாழ்ந்தவர்கள் பாடமடா" என்றார் கவியரசர் கண்ணதாசன். முதியவர்கள் சமுதாயத்தில் முதன்மையான மனிதர்கள். வயதில், அறிவில், ஆற்றலில், பண்பில், பக்தியில், அனுபவத்தில், முதிர்ந்த இவர்களைப் போற்ற

கு. நிசாந்தி தரம் 8A
யா/அத்தியார் இந்துக்கல்லூரி,
நீர்வேலி



வேண்டியது நமது கடமை, மாதா, பிதா, குரு, சான்றோர், பெரியவர்கள் எல்லோரும் இந்த வகைக்குள் அடங்குவார்கள்.

"உலகம் என்பது உயர்ந்தவர்கள் மேற்றே" என்று நூல்கள் கூறுகின்றன. "சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடு வந்து சேராது" என்பது பழமொழி. முதியவர் ஒருவரின் வழிகாட்டல் இல்லாத ஒரு காரியம் வெற்றி தராது என்பது இதன் கருத்து. ஆகவே முதியவர் ஒருவரின் வழிகாட்டல் இல்லாத ஒரு கருமம் முடிவில் நற்பயனைத் தரமாட்டாது. நாம் முன்னேறுவதற்கு முதியவர்களின் அன்பும் அரவணைப்பும் ஆசியும் அவசியம்.

நமக்கு ஒதுக்கப்பட்ட நடைபாதை தான் வாழ்வு. இவ் வாழ்வுப் பாதை பூம் பாதை அல்ல. குன்றும், குழியும், கற்களும், முட்களும், வஞ்சனையும், சூழ்ச்சியும் நிறைந்தது. வாழ்வுப் பாதையில் இளையோராகிய நாம் நடக்கத் தொடங்கியிருக்கின்றோம். இவ்வாழ்வுப் பாதையை ஏற்கனவே நடந்து முடித்தவர்கள் முதியவர்கள். அனுபவப்பட்டவர்களின் தெளிவுகள் எமக்கு நல்ல அறிவுரைகள். ஆகவே முதியவர்களைக் கனம் பண்ணுதல் ஒவ்வொரு தனிமனிதர்களினதும் கடமைகளில் ஒன்றாகும்.

"தன்னலமற்றது தாயின் உள்ளம், தகவு நிறைந்தது தந்தையின் நெஞ்சம், மண்ணுயிர் காப்பவன் மாந்தரின் தெய்வம், மதியுரை முதியோர் முன்னறி தெய்வம்" என்றெல்லாம் இலக்கியம் அவர்களுக்கு இடம் ஒதுக்கியிருக்கின்றது. விழுந்த பின் நினைப்பதை விட விழுமுன் நினைக்க வைக்கும் வார்த்தைகள் முதியோரது வார்த்தைகள்.

இவ் உலகில் உயர்ந்து இருக்கின்ற ஒருவரது சரித்திரத்தை எடுத்துப் பாருங்கள். அவ்வுயர்வுக்குப் பின்னால் முதியவர் ஒருவரின் பங்களிப்பு இருக்கும். ஸ்ரீராம பிரான் வெற்றிக்கு பின்னால் வசிட்டர், மகாத்மா காந்திக்குப் பின்னால் அவரது தாய் புத்திலிபாய், விவேகானந்தருக்கு பின்னால் ராமகிருஷ்ணர், யோகர் சுவாமிக்குப் பின்னால் செல்லப்பா சுவாமிகள், இப்படியே நீண்டது முதியவர்களின் பின்னணி.

ஐக்கிய நாடுகள் சபையினால் கூட முதியோருக்கு முக்கியமளிக்கப்பட்டுள்ளது. முதியோர் ஆண்டு என்று ஒரு தினம் இச்சபையினால் பிரகடனப் படுத்தப்பட்டு உள்ளது. முதியவர்களை முதன்மைப் படுத்தாத நாடும் வீடும் முதன்மையடைய முடியாது. எனவே நாம் ஒவ்வொருவரும் முதியவரைப் பேணி எமக்கும் நாட்டிற்கும் நன்மை அளிக்க முயல வேண்டும். இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபையானது முதியோர் தினமாக செப்ரம்பர் முதலாம் திகதியை பிரகடனப் படுத்தி முதியோரைக் கௌரவித்துள்ளது.

### பொது அறிவு

செல்வன் மு. நிரோஜன்
தி/பேராறு பரமேஸ்வரா ம.வி.
கந்தளாய், திருகோணமலை

1. இலங்கையை ஆட்சி செய்த முதல் அரசி யார்?
   **அனுலா**
2. ரஷ்யாவின் செய்தி நிறுவனத்தின் பெயர் என்ன?
   **டாஸ்**
3. கரப்பான் பூச்சியின் இரத்தத்தின் நிறம் என்ன?
   **வெள்ளை**
4. வீடியோ கமராவை கண்டு பிடித்தவர் யார்?
   **தோமஸ் அல்வா எடிசன்**
5. உலகிலேயே மிகப் பெரிய விலங்கு எது?
   **நீர் திமிங்கலம்**
6. உலகிலேயே மிகப் பெரிய காவியம எது?
   **மகாபாரதம்**
7. சார்க் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
   **1951ம் ஆண்டு**
8. ஜெட் விமானத்தை கண்டு பிடித்தவர் யார்?
   **பிரேன் ஸிட்டிவ்**
9. மிதக்கும் நகரம் என அழைக்கப்படும் நகரம் எது?
   **வெனிஸ் நகரம்**
10. இலங்கையில் முதன் முதலில் தோன்றிய செய்தித் தாள் எது?
    **கொழும்பு ஜோர்னஸ்**

### A trip to Sigiriya

B. Kohela, *Grade 6*
*International School,*
*Bambalapitiya.*

One day during the holidays my parents decided to go to Sigiriya. So we visited the Rock temple. We saw the beutiful paintings there. We had our breakfast at Dambulla. We reached Sigiriya at half past twelve. We started climbing up the steps. We first saw the beautiful frescoes. Then we went up to the lions paw and climbed right to the summit.

Then we saw the ruins of king Kasyapa's palace. The bathing pools and the beautiful laid gardens. We took many photos. We had our lunch near the bathing pools. Then we reluctantly come down. Then we went to the shop and bought souvenirs for friends. The next day we visisted the Yala national park. Kirinde Bird Sanktuary the Dondra light house at Matara the fort in Galle and reached home. We were very tired. Then I had my wash and dinner and went to bed. It was a wonderful day in my life. I thanked my parents for taking to a nice trip and I wished that my parents would take me on another trip during the next holidays.




Ayngaran Video International ஐங்கரன் வீடியோ


Unit 19 River Side Business Park
Lyon Road - London
SW192RL
U.K
Tel:+44(0)20 85 43 44 77
Fax: + 44(0) 20 85 43 44 6

ஐங்கரனின் கிளை ஸ்தாபனங்கள் கனடா, சிங்கப்பூர், சென்னை, கொழும்பு, பாரிஸ், யேர்மனி, சிட்னி ஆகிய இடங்களில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்



பி. காயத்திரி
சோமசுந்தரம் முன்பள்ளி,
யாழ்ப்பாணம்.






## My School

1. My School is Uduvil Girls College
2. It's big school
3. Our principal is Mrs. S. Mills

by:- Anchana-Rajakumaran.
Grade-1
J / Uduvil Girls College,
Jaffna.



யா/வயாவிளான் ம.ம.வி மாணவன் செல்வன். உதய குமார் வஷ்சலன் அவர்கள் கலை நிகழ்வு ஒன்றில் காவடி நடனத்தில் பங்கு பற்றியமையை படத்தில் காணலாம்.





ச. நிருபா
ஆண்டு - 05
யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்

## எனது பாடசாலை



எனது பாடசாலையின் பெயர் சத்திய சாயி வித்தியாலயம் ஆகும். எனது பாடசாலை மானிப்பாயில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அதிபரின் பெயர் திருமதி பத்மநாதன். நான் தரம் மூன்றில் கல்வி கற்கின்றேன். எனது வகுப்பாசிரியரின் பெயர் செல்வி புராத்திரா. எனது பாடசாலையில் தினமும் காலைப்பிரார்தனை இடம் பெறும்.

எனது பாடசாலை ஒழுக்கமும் பண்பும் நிறைந்த பாடசாலை

by:- கணேசநாதன் ஆரபி
ஆண்டு - 03
யா/சத்திய சாயி வித்தியாலயம்
மானிப்பாய்

## காதோடு காதாக கனடாவில் இருந்து க.(ர)து



### வாழ நினைக்கினம்

கனடாவில் வீட்டுக்காரன்
ஒரு sofa வுக்கும் ஒரு சாப்பாட்டு மேசைக்கும், ஒரு 4 p.c wash room க்கும் மாதம் 1825 டொலர் கட்டுறன்.
நண்பன்:
ஏன் புது வீடு வாங்கினனி அல்லே. என்ன நடந்தது.
வீட்டுக்காரன்:
நானும் மனிசியும் இரண்டு வேலை, படுக்கிறது sofa விலே, கடைச் சாப்பாடு சாப்பிட மேசை, குளிக்கக்கமுவ wash room, மற்ற இடங்கள் ஒன்றும் பாவிக்கிறது இல்லை.
நண்பன்:
வாழ நினைக்கினம். வாழவில்லை.



# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கைகுலுக்க வேண்டும்!

சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் சிறந்த முழுமையான கல்வி பற்றி எமக்கு உணர்த்துகின்றன. மனிதனில் ஏற்கனவே உள்ள நிறை நிலையை வெளிப்படுத்துவதே கல்வி என்றார் விவேகானந்தர். ஆன்மா அறிவின் பிறப்பிடம். மனிதனின் உண்மை இயல்பு எது?. உடம்பினுள் திகழ்கின்ற ஆன்மா அவன்.

பரம்பொருளும் ஆன்மாவும் வேறல்ல. நீ அதுவாகிறாய் என்ற உபநிடத மகா வாக்கியத்தில் மனிதன் தெய்வீக மானவன். அவனுள் தெய்வீகம் உள்ளது என்றார் விவேகானந்தர். எம் உண்மை இயல்பு தெய்வீகம், புனிதம், அனைத்தின் இருப்பிடம்.

விவேகானந்தர் கண்ட முழுமையான கல்வியில் கொள்கை நிலை, செயல் முறை நிலை, சமுதாயநிலை என்ற அம்சங்கள் உள்ளன. விஞ்ஞானமும் புற உலகில் உண்மையைத் தேடுகின்றது. ஆன்மீகம் உணர்வின் ஆழங்களில் உண்மையைத் தேடுகின்றது. விஞ்ஞானமும் ஆன்மீகமும் கைகோர்த்துச் செல்லவேண்டும்.

இரண்டு கல்வியும் முழுமையான கல்விக்கு அவசியம் என்கிறார் விவேகானந்தர். ஒரு பக்கம் கல்வி மனிதனின் புலன்கலைக் கடந்து செல்வதற்கு உதவவேண்டும். மறுபுறம் ஆன்மீக ஞானம் பெற உதவ வேண்டும்.

பெற்ற அந்த அறிவை வாழ்க்கையில் செயல் முறைப்படுத்தி வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண உதவ வேண்டும். இதையே செயல்முறை வேதாந்தம் என்கிறார் விவேகானந்தர்.

கல்வியும் ஆன்மீகமும் தன்னை வெளிப் படுத்துதல் அல்லது தன்னை அறிதல் என்பதன் இரண்டு நிலைகளாகும்.

நல்லாற்றலை வளர்க்கவும் நல்லொழுக்க வாழ்க்கை வாழவும், மனிதகுலத்திற்கு சேவை செய்யவும் கல்வி ஒருவனைத் தகுதியுடையவனாக்க வேண்டும்.

மன ஒருமைப்பாடு, பற்றின்மை என்பனவற்றை வளரச்செய்யவும் ஆர்வம், ஆராயும் அறிவு, அறுதி உண்மையை அடைவதற்கான தேடலைத் தூண்டுதல் போன்றனவற்றிற்கு கல்வி உதவ வேண்டும்.

நல்லவனாக ஒருவன் இருக்கவேண்டும் என்றால் புதிதாக எதனையும் செய்யவேண்டிய தில்லை. தமது உண்மை இயல்பை உணர்ந்து வாழ்தலே அது.

தீமை செய்யும் ஒருவன் தனது உண்மை இயல்பில் இருந்து வீழ்ச்சியடைகின்றான். உன்னை நீ உணர்ந்து கொள்வதனால், விழித்தெழுவதனால் சக்தி வரும். நன்மை வரும். தூய்மை வரும். அகவலிமை வரும். எவை எல்லாம் மேலானதோ அவை அனைத்தும் வரும். பிரபஞ்சத்தை இயக்குகின்ற சக்தியே நன்மையும் இயக்குகிறது என்பதை நம்புவதே தன்னம்பிக்கை யாகும். இதுவே உண்மையான பலத்தை நமக்கு தருகிறது. பிரபஞ்சத்தில் இருந்து தன்னை வேறு படுத்திப் பார்க்காத பரந்த அறிவைத் தருகிறது.

இதனால் பொறாமை, ஆசை, கோபம் போன்றன அகன்றுவிடுகின்றன.

கல்வியினால் தன்னம்பிக்கை வளரும். ஆன்மா விழித்தெழும். பயம் காரணமாகவோ வற்புறுத்தல் காரண மாகவோ நற்பண்புகளைப் பின்பற்றாமல், எம் உண்மை இயல்பின் வெளிப்பாடுகள் அவை என்பதனை உணர்ந்து வாழமுடியும்.

சிறந்த குணத்தை உருவாக்குகின்ற மன வலிமையை வளர்க்கின்ற அறிவை விரியச்செய்கின்ற. சொந்தக் காலில் நிற்கச் செய்கின்ற கல்வியே தேவை. ஆன்மீக அறிவு, உலக அறிவு ஒருகிணைந்த கல்வித்திட்டம் அவசியம் என்கின்றார் விவேகானந்தர். அறிவு வளர்ச்சியினால் ஏற்படும் பொருளாதார நன்மைகள், குற்றங்களின் வளர்ச்சி நன்மையற்றதாக்கி விடும். எல்லா மனிதர்களிலும் இறைவனே ஆன்மாவாகக் குடியிருக்கின்றார். இவ்வுண்மையை உணர்ந்த கண்ணோட்டமே மனித குலத்தின் ஒருமைப் பாட்டின் அடிப்படை உண்மை. நற்பண்புகளுக்கு ஆதாரம். ஒருவன் தன்னை உணர்வதனாலேயே உண்மைப் பலம் வருகின்றது. பலமே வாழ்வு. பலவீனமே மரணம்.

தயாநிதி மோகன்
B.A. (Dip.in.Edu)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையரங்கம்



## அன்றும் இன்றும்



### இதோ ஒரு கலைச்செல்வி

அன்று 10.10.98 தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினரால் நடந்த விடுதலை கானம் பாடி நிகழ்ச்சி யேர்மனியில் எசன் மாநகரில் நடைபெற்றது.


ஐரோப்பாவில் பல பாகங்களில் இருந்து வந்து உணர்ச்சியோடு திறமைமேலிட பாடி அனைவரையும் கவர்ந்தனர். நடுவர்களாகப் பிரான்ஸில் இருந்து வந்த சங்கீத பூசணம் குணசீலன், டென்மார்க் இசைமணி குமதா பிரதிவிராஜ், அவுஸ்ரேலியாவிலிருந்து வந்த கலைமணி ஸ்ரீகாந்தி சண்முகம் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

கீழ்ப் பிரிவுக்கான சிறுவர் போட்டியில் ஜெர்மனி குமஸ்பாக்கைச் சேர்ந்த 12 வயது சிறுமி ஒலிவியா தனபாலசிங்கம் இவ்வருடமும் சிறந்த முறையில் பாடி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இன்று அச்சிறுமி வளர்ந்து சங்கீதம் மட்டுமன்றி பரதம், வீணை, மேல்நாட்டு இசை, நடனம் என அவரது கலைவிரிந்து செல்வதை காண முடிகிறது. அண்மையில் (2004) நடந்தேரிய The Orental fine Arts Acadamy of london நடத்திய பரீட்சையில் சங்கீதத்திலும் வீணையிலும் சித்திபெற்று Diploma பட்டம் பெற்றுள்ளார். ஐரோப்பாவில் (லண்டன் தவிர்ந்த) Diploma எடுத்த முதல் மாணவியாக ஒலிவியா திகழ்கின்றார். இவர் யோர்மனி சங்கீத பூசணம் செல்வசீராளன் அவர் களின் முதல் மாணவி. இவர் மட்டுமன்றி இவர் குடும்பத்தில் இளைய சகோதரன் ஓடின் தனபாலசிங்கம் (வயது 15) அண்மையில் மந்திரா என்ற இசைப்பேழை ஒன்றை வெளியிட்டுள்ளார். இவர்களது கலையார்வம் எதிர்காலத்தில் பல சாதனைகள் புரிய வழிவகுக்கும் என்பது திண்ணம்.

## ஓவியத்திற்குள் ஒரு அதிசய ஓவியம்

பாசலில் இருந்து ஏ.ஜே.ஞானேந்திரன்



ஓவியத்திற்குள் மறைந்து கிடந்த ஓவியம் ஒன்று தற்போது வெளி வந்துள்ளது. 1483ம் ஆண்டு வரைந்த ஒரு ஓவியம் அது. அதனை வரைந்தவர் ஒரு சாதரண மனிதரல்ல. இன்று வானில் பறக்கும் விமானத்திற்கும் வடிவம் கொடுத்த விஞ்ஞானி. மர்மப் புன்னகை அரசி மோனோலிசாவினைப் படைத்த ஓவியர். அவர்தான் வியனாடோ டாவின்சி ஆவர்கள்.

ஓவியத்திற்குள் மறைந்து இருப்பதை Infra-red கதிர்களின் உதவியுடன் கண்டுபிடித்துள்ளார்கள்.

இலண்டனில் உள்ள தேசிய ஓவியக் கண்காட்சிக் கூடத்தில் Virgin of the Rocks என்ற கன்னி மரியாளின் ஓவியத்தின் கீழ் இன்னுமொரு ஓவியம் இருப்பதைக் கண்டறிந் துள்ளனர். ஒரு பெண் தனது கைகளை மேலே விரித்துக் கொண்டு முழந்தாளில் உட்கார்ந்தபடி இருக்கும் ஓவியமே இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



1483ம் ஆண்டு இத்தாலி நாட்டின் உலகப் பகழ்பெற்ற ஓவியரான (Leonoardo da Vinci) வியானாடோ டாவின்சி மிலானோவின் ஆலயம் ஒன்றிற்கு கன்னி மரியாவின் ஓவியம் ஒன்றை வரைய ஆரம்பித்திருக் கின்றார். இவர் இரண்டு வேறு பட்ட ஓவியங்களை இத்தரணத்தில் வரைந்திருக் கின்றார். இதில் ஒன்று பிரான்ஸ் நாட்டில் அருங்காட்சியகத்தில் இருக்கின்றது. மற்றையது இலண்டனில் இருக்கின்றது. இலண்டனில் உள்ள ஓவியத்தின் பின்னாலேயே மறைந்து கிடந்த ஓவியத்தை தற்போது கண்டு பிடித்துள்ளனர். ஏன் ஓவியத்திற்குமேல் இன்னொரு ஓவியம் வரைந்தார் என்பது புதிராகவே உள்ளது. மோனோலிசா ஓவியரான இவர் ஒரு கணிதவல்லனர் ,கட்டக்கலைஞர், சிற்பி, என்று பல துறைகளில் சிறந்து விளங்கிய தோடு பரசூட், விமானம்,(A) ஆகி வற்றின் கண்டுபிடிப்புக்கும் வடிவம் கொடுத்த ஒரு விஞ்ஞானியாகவும் திகழ்ந்துள்ளார்.



அருவி

உனக்குத் தெரியுமா
நான்
உன்னை நினைப்பது
புகழ்

**சங்கீதபூசனம்**
**மாலினி பரமேஷ்**
**நினைவாக**

மெல்லிசை மன்னர்
திருமலை
எம்.பி. பரமேஷ்
அவர்கள்
வாரிசுகள்
(யேர்மனி)







ப. கம்ஷா   ய. ஜிந்துஜா



ச. வத்சலன்

அண்மையில் நடைபெற்ற "கலைக்காவிரி" மன்ற கலை நிகழ்வின் போது மன்ற மாணவன் செல்வன் மாதவன் புல்லாங்குழல் இசை வழங்குவதையும், மாணவ மாணவியரின் ராஜஸ்தான் நடனம், காவடி நடனம் நிகழ்வுகளையும் படங்களில காணலாம்.





கலைக்காவிரி மன்ற மாணவனான
செல்வன் A. அமிர்தலோஜனன் அவர்கள் இசைத்துறையில் மன்றத்து நிகழ்வுகளில் பெரும் பங்கு கொண்டு சிறப்பித்து வருகின்றமையை பாராட்டி மன்றத்தினரால் விருது வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கம்

## கனடா - தமிழன் வழிகாட்டி செந்தில் ஆதரவில்

எமது தாயகப் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத்திறன் விருத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் வகையில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் இருந்து மாகாண, தேசிய சர்வதேச மட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களை சந்தித்து, அவர்களது திறமைகளை இங்கு வெளிக்கொணர்வது வெற்றிமணி விளையாட்டரங்கின் நோக்கமாகும். அந்த வகையில் எமக்கு இம்முறை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது தி / வேராற்று வெளி முஸ்லீம் மகா வித்தியாலய மாணவன் M.N.M றிப்னாஸ் ஆவார்.



## சர்வதேச விளையாட்டு போட்டிக்கு தயாராகும் திருமலை மாணவன் றிப்னாஸ்

முகமட் நயிம் றிப்னாஸ் திருகோண மலை மாவட்டத்தல் உள்ள பேராற்று வெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 10ல் கல்வி கற்கின்றார். இவர் பாடசாலையில் நடைபெற்ற பல்வேறு மெய் வல்லுநர் நிகழ்வு களில் பங்குபற்றி பல சம்பியன் கிண்ணங்களை பெற்றுள்ளார்.

றிப்னாஸ் 2004ம் ஆண்டு நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் 100m, 200m ஓட்ட போட்டிகளில் 15வயது பிரிவில் பங்குபற்றி மாகாண நிலையில் முதலிடங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றியதாகக் குறிப்பிடுகின்றார். 2005 ஆம் ஆண்டு நடை பெற்ற மகாணமட்ட போட்டிகளில் 17 வயதின் கீழ் 200m ஓட்டப் போட்டியில் நடுவர்களின் கவனயீனத்தால் இரண்டாம் இடத்தைப் பெறவேண்டிய வேளையில் மூன்றாம் இடத்தையே பெற்றதாக மிக மன வருத்தத்துடன் தெரிவித்தார்.

அத்தோடு பாடசாலை உதைப்பந்து, கிரிக்கெட், நகர் அணிகளின் தலைவராக விளங்குவதாகவும் குறிப்பிட்டார். 186 நாடுகள் கலந்து கொள்ளும் சர்வதேசப் போட்டிக்காக தற்போது பயிற்றுவிப்பாளர் திரு. S.விஜயநீதனிடம் பயிற்சி பெற்று வருவதாகவும் றிப்னாஸ் குறிப்பிட்டார்.

''றிப்னாஸ் சர்வதேச போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற வெற்றி மணி விளையாட்டரங்கின் வாழ்த்துக்கள்''

தொகுப்பு:- சு. இளங்கோவன்

# விளையாட்டுத்துறை நூல் வெளியீட்டு விழா



நூலாசிரியர் பிரதம விருந்தினரை மாலையணிவித்து வரவேற்கின்றார்

ஆசிரியர் சு. இளங்கோவன் அவர்களின் ''குரும்பசிட்டி மக்களின் விளையாட்டுத்துறை ஓர் ஆய்வு'' என்னும் நூல் வெளியீட்டு விழா கடந்த 27. 8. 2005 யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினர் நடாத்தப்பட்டது. விழாவில் யா/ சாவகச்சேரி றோ.க.த.க பாடசாலை அதிபர் திரு. ந. ஜெயகுமாரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக் கழக உடற்கல்வி விஞ்ஞான அலகின் உதவி விரிவுரையாளர் திரு. ம. இளம்பிறையன், சமாதான நீதவான் நீர்வேலி திரு. K. தர்மலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற ரெலிகொம் பொறியியலாளர் திரு. K.T. பாலசுப்பிரமணியம், ஓய்வு பெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. வ.கிருஸ்ணசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நூல் வெளி யீட்டுரையை திரு. K.T. பாலசுப் பிரமணியம் அவர்களும், மதிப் பீட்டுரையை திரு. ம. இளம்பிறையன் அவர்களும், பதிலுரையை நூலாசிரியர் சு. இளங்கோவன் அவர்களும் நிகழ்தினார்கள். மேற்படி நிகழ்வில் குரும்பசிட்டி உதயதாரகை மன்ற சுற்றுப் போட்டிகளில் தொடர்ச் சியாக 25 வருடங்கள் புன்னாலைக் கட்டுவன் பறக்கும் விளையாட்டுக் கழகம் சார்பாக விளையாடிய திரு. த. தம்பிராசா (குமுக்கா) அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப பட்டதுடன், சிறப்பு நிகழ்சியாக குரும்பசிட்டி கலைக்காவிரி மன்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது

தொகுப்பு:- தெ. சஞ்சீவ்



சிறுவர் உளநல திட்ட நிர்வாக உத்தியோகத்தர் திரு. ச. கோகுலன் பிரதமவிருந்தினரிடம் சிறப்புப் பிரதி பெறுகின்றார்.



திரு. ந. ஜெயக்குமாரன்



K.T. பாலசுப்பிரமணியம்



திரு. சு. இளங்கோவன்



திரு. M. இளம்பிறையன்

### காந்தியும் (B) பவுண்றியும்!





மகாத்மா காந்தி என்றதும் இந்தியாவின் தேசபிதா என்பதே நினைவுவரும். அவரும் ஒரு கிரிக்கெட் வீரர்தான் என்பது பலருக்கும் தெரியாது. இவர் ஒரு முறை இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்று இங்கிலாந்து அணியுடன் மோதியுள்ளார். அப்போது அவர் அடித்த ரன்களின் எண்ணிக்கை 27 ஆகும். இவற்றில் 3 பவுண்றிகளும் அடங்கும்.

விளையாட்டரங்கு

அனுசரணையாளர்
**திரு. செந்தில் செல்லையா**
தமிழன் வழிகாட்டி அதபர்,
கனடா.



Senthi Chelliah
President

தமிழன் வழிகாட்டி
Tamil's Guide

வர்த்தகச் சோலை
South Asian Trade Show

Canadian Tamils' Business Directory

Athavan Publications Inc.
201-792 Kennedy Road
Scarborough.ON.Canada.M1K 2CB
Canada
Tel: +416-615 46 46
Fax: + 416 615 24 14
E-mail: tamilsguide@rogers.com

Athavan
Publications Inc

Scarborough.ON.Canada.M1K 2CB
Canada
Tel: +416-615 46 46
Fax: + 416 615 24 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அண்மையில் யா/புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பவள விழா நடை பெற்ற போது ''பவளம்'' நூல் வெளியீடும் இடம் பெற்றது. மேற்படி விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. குபேரநாதனிடம் மாணவி ஒருவர் ''பவளம்'' நூல் பிரதியைப் பெறுவதையும் அருகில் பாடசாலை அதிபர் திரு. சி.மணியம் நிற்பதை முதலாவது படத்திலும், பாடசாலை முன்னேற்றத்திற்கு உதவி புரிந்து பல வழிகளிலும் உதவிய பெரியார்கள் திரு. க. தர்மலிங்கம் J.P, திரு. செ. செல்வரத்தினம் J.P, கலாபூசணம், தி. ஞானசேகரன் ஐயர் J.P, திரு. ஆ. துரைராசா ஆகியோரைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி விழாவில் கௌரவிக்கப்பட்டமையை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## நம்பிக்கை ஒளி

### சோகம் தந்த சுனாமி

வாரித் தந்த கடலம்மா - நீ
வாரிச் சென்றதேன் அம்மா -எம்
வாழ்வின் பலமாய் இருந்த நீயே எம்
வாழ்வை அழித்த தேனம்மா

சுண்டும் முன்னே பாய்ந்து வந்த
சொல்லில் அடங்காத் துயர் தந்தாய்
எங்கள் வாழ்வு உள்ளவரை
இந்தத் துயரை நாம் மறவோம்.

சார்லிக் குயின்ரஸ் (வாழ்வகம்)
தரம் 9
யா / யூனியன் கல்லூரி





யா/பண்டத்தரிப்பு உயர்தரப் பெண்கள் பாடசாலை புதிய கட்டிடத் திறப்பு விழாவின் போது பிரதம விருந்தினர் மங்கள விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் திருமதி கி. சிவராஜா அருகில் நிற்பதையும் முதலாவது படத்திலும், புதிதாக திறந்து வைக்கப்பட்ட புதிய மாடிக் கட்டிடத்தை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## கவிப்பேரரசைக் கவர்ந்த வெற்றிமணி



கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் அண்மையில் கனடா சென்றபோது அங்கு வெற்றிமணியைக் கண்டு மெச்சி வாழ்த்தினார். இப்பத்திரிகை தனக்குக் கிரமமாகக் கிடைப்பதாகவும் வெற்றிமணியின் வடிவமைப்பையும், பதிப்பையும் பார்க்கும் போது இப்பத்திரிகை தன்னை மிகவும் கவர்ந்துள்ளதாகவும் கூறினார். படத்தில் வைரமுத்து அவர்களுடன் நண்பர்கள் சட்டத்தரணி மனுவேல் யேசுதாசன், கலாநிதி கவிஞர். வி. கந்தவனம், கதிர்துரைசிங்கம், திரு. சோதி ஆகியோரைக் காணலாம்.


EURO ASIAN MARKT + KIOSK

EURO ASIAN MARKT + KIOSK
Ennerper Str.128A
58135 Hagan Germany
Tel: 02331 340 34 97
Fax:02331 348 41 87

யேர்மனியில் நம் மண்ணை நினைவூட்டும் எம் பொருள்களின் தரமும்!சுவையும்!!



R&S Auto Sales





Radha

BUY-SELL-TRADE
Tel:(416)412 3838
Fax:(416)412 1174
4362 Sheppard Ave.East
-Scarborough,
On- M1S 1T6
Canada

S.K.Silks Paradise

Adler str 33 -
44137 Dortmund
Germany
Tel:0231-9501647
Fax:0231- 9501648





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org